OS .No. 138/2022 நாள் : 19.08.2025

PW1 ரேவதி

குறுக்கு விசாரணை (பிரதிவாதிதரப்பில்)

எனது கணவர் ஆசாரி வேலை பார்க்கிறாரா என்றால் இல்லை. புகாரில் கூறியுள்ள இடத்தில் தற்போது ஆசாரி வேலை நடைபெறுகிறது என்றால் இல்லை. ஹார்வேர்ட்ஸ் கடை வைத்துள்ளோம். எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு பிளைவுட் கடை உள்ளது, அது எங்கள் கடைதான். அதுபோல் பிரதிவாதி வீட்டிற்கு அருகில் ஒரு காலி மனை வாங்கியுள்ளோம். அதில் தகர சீட் போட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தகர சீட் போட்ட இடத்தில்தான் மரப்பட்டறை உள்ளது என்றால் இல்லை, வியாபாரத்திற்காக மரங்கள் அடுக்கி வைத்துள்ளோம். எனது கணவர் ஆசாரி வேலைதான் பார்க்கிறார் என்று சொன்னால் அது தவறு. எனது கணவருக்கு துணையாக எனது மகன் உள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு எனது மகன் கடையில் உதவியாக உள்ளார். எனது 2 வது மகன் தனியார் நிறுவனத்தில் கூலி வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் எம்பிஏ படித்துவிட்டு நாகூரில் ஐடி கம்பெனியில் வேலை செய்து வருகிறார். நாகூரில் அதுபோல் ஐடி கம்பெனி இல்லை என்றால் சரியல்ல. எனது மகன் எம்பிஏ படித்துள்ளார் என்றும், கோல்ட் மெடலிஸ்ட் என்பதற்கும் எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது வழக்கிற்கு தேவையில்லை. வழக்கிற்கு தேவையில்லாத விவரத்தை ஏன் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஏற்பட்ட அவமானத்திற்காக நான் சொன்னேன். வழக்கிற்கு தேவையில்லை என்று சொல்லிவிட்டு முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பம் நாகப்பட்டினத்தில் பிரசித்து பெற்ற குடும்பம் என்று சொல்லியுள்ளதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கோவில் திருவிழாக்கள் மற்றும் இதர பொது நிகழ்ச்சிகளிலும் பெரும் முக்கியத்துவத்தையும், மரியாதையையும் பொதுமக்கள் தந்து வருகிறார்கள் என்று வழக்குரையில் சொல்லியுள்ளதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் குடும்பம் பிரசித்தி பெற்ற குடும்பம் இல்லை என்றும், கோவில் திருவிழாக்கள் மற்றும் பொதுநிகழ்ச்சிகளில் பொதுமக்கள்

முக்கியத்துவம் காட்டுவதில்லை என்பதால்தான் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி மீது அவதூறு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என்னைப்பற்றி நானே பெருமையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் தினசரி மக்கள் கூட்டம் அதிகம் வரும் என்று சொல்லியுள்ளது கடைக்கு வரும் மக்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் மக்கள் மரியாதை கொடுத்து வருகிறார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்கள்மீது பொறாமை கொள்வதற்கான காரணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி கிரிமினல் வழக்கை ஒப்புதல் செய்து முடித்து விட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஏற்பட்ட அவமானத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு அவமானம் ஏற்படும் அளவிற்கு பிரதிவாதி எந்த செயலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்குரை என்றால் சரிதான். அதில் 2 வது பக்கத்தில் கடைசி பாராவின் 21.03.2022 மாலை 5.00 மணிக்கு முதல் பிரதிவாதி பேசினார் என்று சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது என்றால் சரிதான். அந்த புகாரில் 21.03.2022 மாலை 5.00 மணிக்கு பேசியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 22.03.2022 அன்று என்னை அடித்ததற்கு மட்டுமே புகார் கொடுத்தேன். அந்த புகார் 24.03.2022 அன்றுதான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னால் வெளியே வரமுடியில்லை. அவமானமாக இருந்தது, அதனால் இரண்டு நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன். பிரதிவாதி என்னை அடிக்கவோ, பேசவோ இல்லை என்றும், அதனால்தான் இரண்டு நாட்கள் கழித்து பின்யோசனையிட்டு புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகாரில் காலதாமதத்திற்கு காரணம் சொல்லவில்லை. அவமானமாக இருந்ததால்தான் காலதாமதமாக கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் கட்சியில் உள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவர் கட்சியில் உள்ளார் என்றும், அந்த செல்வாக்கை பயன்படுத்திதான் பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால்தான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக கற்பனையாக ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

என்னை அடித்ததற்கு மருத்துவரிடம் சிகிச்சை எடுத்தேனா என்றால் எனக்கு அவமானமாக இருந்ததால் மாத்திரை மட்டும் வாங்கி சாப்பிட்டுக்கொண்டேன். மேற்படி விவரத்தை நான் புகாரில் குறிப்பிடவில்லை. என்னிடம் காட்டப்படும் பிராதில் 17 வது பாராவில் என்னை 24.03.2022 அன்று 1ம்பிரதிவாதி பலபேர் முன்னிலையில் என்னை அடித்து திட்டினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பிரதிவாதி என்னை 24.03.2022 அன்று பலபேர் முன்னிலையில் அடிக்கவில்லை என்றால் 22.03.2022 அன்று அடித்தார். நான் 24.03.2022 அன்று புகார் கொடுத்தேன். நான் சொல்வது போல் 21.03.2022, 22.03.2022, 24.03.2022 தேதிகளில் நான் வழக்கில் கூறியவாறு பிரதிவாதி எந்த செயலும் செய்யவில்லை என்றும், அதனால் தான் நான் பலதேதிகளில் சம்பவம் நடந்ததாக முன்னுக்குப்பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் நான் சரியான தேதி குறிப்பிட்டு புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகாரில் 1ம் பிரதிவாதி 22.03.2022 அன்று என்னை தேவடியா மகளே, குச்சிக்கார் மகனே என்று கொச்சை வார்த்தைகள் சொல்லி திட்டியதாக இல்லை என்று சொன்னால் கேவலமாக பேசியதாக கூறப்பட்டுள்ளது. அதுபோல் பிரதிவாதி பேசாததால்தான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னை அடித்ததாக சொல்வது தவறு என்றும், அவ்வாறு அடித்திருந்தால் நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றிருப்பேன் என்றால் சரியல்ல. புகாரில் பிரதிவாதி என்னை அடித்து திட்டியதை பலபேர் பார்த்ததாகவும், அவர்கள் பெயர் சொல்லியுள்ளேன். பாலசுப்ரமணியன், கோவிந்தசாமி, ஜீவானந்தம், சுப்ரமணியன், இவர்கள் பெயர்களை புகாரில் சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் பாலசுப்ரமணியன், கோவிந்தசாமி, ஜீவானந்தம், சுப்ரமணியன் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று சாட்சி புகாரை பார்த்துவிட்டு சொல்கிறார். முதலில் என்னை அடித்ததற்கு மட்டும்தான் புகார் கொடுத்தேன். சாட்சி விவரங்களைபற்றி போலீசார் விசாரணையின் போது சொன்னேன். என்னிடம் காட்டப்படும் போலீசார் விசாரணையில் எனது வாக்குமூலத்தில் நான் சொன்னதாக சொல்லும் மேற்கண்ட நபர்கள் பெயர்கள் இல்லை என்றால் சரிதான்.

பலபேர் பார்த்ததாக சொல்வது எனது கற்பனை என்றால் சரியல்ல. அதனால்தான் நான் பலபேர் பாரத்தததாக சொல்லிவிட்டு அவர்கள் பெயர் போலீசார் விசாரரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பாலசுப்ரமணியன், கோவிந்தசாமி, ஜீவானந்தம், சுப்ரமணியன் ஆகியோர்கள் எங்களது சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் அவர்கள் பெயர்களை எனது கணவர் செல்வாக்கை பயன்படுத்தி சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவர் வீட்டின் உள்ளே மாடியில் வாக்கிங் போய்க்கொண்டிருந்தார். சத்தம் கேட்டுதான் கீழே வந்தார், அதற்குள் சம்பவம் நடந்து முடிந்து விட்டது. என் கணவருக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் யாரை சாட்சியாக விசாரிக்கப்போகிறேன் என்றால் பாலசுப்ரமணியன், ஜீவானந்தம், சுப்ரமணியன் ஆகியோர்களை நான் விசாரிக்க போகிறேன். பாலசுப்ரமணியன், ஜீவானந்தம், சுப்ரமணியன் ஆகியோர் எங்கள் தெருவில் வசிக்கவில்லை. ஆனால் அவர்கள் சம்பவம் நடந்தபோது தெருவில் சென்றார்கள் . நான் அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி சங்கர் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை பதியப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். அவர் அரசு ஊழியர் என்பதால் வழக்கில் மட்டும் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அத்துமீறி பாதாள சாக்கடை அமைத்துள்ளார் என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதாள சாக்கடைக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். வாழைமரம் வெட்டி போட்டதால்தான் சண்டை வந்தது. நான் வாழைமரத்தை வெட்டி எங்கள் வாசலில் போடவில்லை என்றும், 1ம் பிரதிவாதி வீட்டு வாசலில் போட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. வெட்டிப்போட்ட வாழை மரத்தை அகற்ற சொல்லி 1ம் பிரதிவாதி கேட்டதால் எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. புகாரை நீதிமன்றத்திற்கு அலைய முடியாததால்தான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க 1ம் பிரதிவாதி குற்றவியல் வழக்கை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தினார் என்றால் சரியல்ல.

குற்றவியல் வழக்கில் அபராதம் செலுத்தியதால் பிரதிவாதி மீதான வழக்கு உண்மையாகிவிடாது என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி யார் யார் என் மகனிடமும், என்னிடமும், என் கணவரிடமும் விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் நேரடியாகவும், மறைமுகமாகவும் கிண்டலாக கேட்டார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. யாரும் என்னை அவ்வாறு கேட்கவில்லை என்பதால்தான் நான் யார் பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தனிப்பிட்ட புகார் எதுவும் பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் எந்த சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும், அதனால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**